DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, MADURAI

Ar.O.P.28/2019

DEPOSITION OF WITNESS FOR THE PETITIONER

.....

| | |
|---|---|
| Name | : மாணிக்கம் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.9.2019

மு.வி.

நான மனுதாரர். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ.1 முதல் 4 வரை குறியீடு செய்யப்படுகிறது.

கு.வி.2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

தேசீய நெடுஞ்சாலையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான திட்டபணிகள் 2011-12 ல் ஏற்பட்டது என்றால் சரி. 3 எ 1, அறிவிப்பு 1.1.2014 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரி. அதன் சரத்துக்கள் 13.1.2014 ல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியானது என்றால் சரி. அதன்பிறகு சிறப்பு டி.ஆர்.ஓ. இராமநாதபுரம் விசாரணை நடத்தினார் என்றால் சரி. அதில் நாங்கள் ஆட்சேபணை தெரிவித்தோம். 3 டி1 அறிவிப்பு 18.9.2014 லிலும் அதனை தொடர்ந்து 10.11.2014 ல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியானது என்றால் சரி. மதுரை மாநகராட்சி எல்லையில் இருந்து விரகனுார் கிராமம் 1 கிலோமீட்டர் துாரத்தில் அமைந்துள்ளது என்றால் சரி. எனது நிலத்தில் வீடுகளும் மரங்களும் இல்லை வருவாய்த்துறை ஆவணங்களில் நிலம் புஞ்சை என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகில் கே.எல்.என் கல்லூரி, வேலம்மாள் பொறியியல் கல்லூரி போன்ற முக்கியத்துவம் ஆன நிறுவனங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. அவை சுமார் 5 கிலோமீட்டருக்கு அதிகமான துாரத்தில் அமைந்துள்ளன என்றால் சரியல்ல. சென்டு 1க்கு ரூபாய் 2 இலட்சம் வரை விலை போவதாக அதிகப்டுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. சார்பு பதிவாளர் அலுவகத்தில் இருந்து 3 ஆண்டுகளுக்கான விற்பனை புள்ளிகளை எடுத்து அதில் உயர்ந்தபட்ச வணிகநோக்கிலான நில மதிப்பில் 50 சதவீத சராசரிக்கு கணக்கீடு செய்யப்பட்டு சதுர மீட்டர் 1க்கு ரூ.1147/- இழப்பிடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணம் ம.ச.ஆ.3 நஞ்சை நிலத்திற்க்கானது என்றால் சரி. ம.ச.ஆ.3 ஆவணத்தில் தரப்பினர்களை எனக்கு தெரியும். ம.ச.ஆ.3 கிரைய ஆவணம் நஞ்சை நிலத்திற்கானது என்பதால் ஆர்ஜித புஞ்சை நிலத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. ராமநாதபுரம் மாவட்ட சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்ஜித நிலங்களை புலத்தணிக்கை செய்தும் விற்பனை புள்ளிகள் அடிப்படையிலும் 50 சதவீத சராசரி கணக்கிட்டு இழப்பிடு வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கோரியுள்ள இழப்பிடு தொகை அதிகம் என்றாலும் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

கு.வி. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை மேற்கொள்கிறார்.

ம.வி. இல்லை.

ஒப்பம்.மாணிக்கம், ஒப்பம். எளஎ, முதன்மை மாவட்ட நீதிபதி, மதுரை.